<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 75/2025</u>

LW : 8  PW : 5

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | ராமு | த / பெ. | விஷ்வநாதன் |
| கிராமம் | : | மூவர்க்கோட்டை | தாலுக்கா | நீடாமங்கலம் |
| தொழில் | : | விவசாயம் | வயது | 55 |

**<u>எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.</u>**

**<u>முதல்விசாரணை</u>**

நான் நீடாமங்கலம் தாலுக்காவில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் மூவர்க்கோட்டை கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருந்தேன். அப்போது விவசாய வெள்ள பாதிப்பு சம்பந்தமான இழப்பீடு தொகை ரூ.54,544 /- பெற்றேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் மூவர்க்கோட்டை கூட்டுறவு சங்கத்தில் செயலாளராக இருந்தார்.

என்னிடம் காட்டப்படும் **பண எடுக்கப்படும் சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது. அது அதசாஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னுடைய கூட்டுறவு சங்க கணக்கு எண் எனக்கு தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் **சேமிப்பு கணக்கு பேரேடு வரிசை எண் 19 (SB 3) பக்க 199 ல் உள்ள கையொப்பம் என்னுடையது. அது அதசாஆ. 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரி மேல் வழக்கு சம்பந்தமாக என்னிடம் அதசாஆ. 13 காட்டி போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சேமிப்பு கணக்கு பேரேட்டில் அதசாஆ. 13 ல் பக்க முழுவதும் கணக்குகள் எழுதப்பட்டுள்ளது. 21.10.2016 வரை எழுதப்பட்டுள்ளது. அதனுடைய தொடர்ச்சி உள்ளதா என்று குறிப்புகள் இல்லை என்றால் சரிதான்.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.02.11 17:43:03 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்